**யடிநுவர பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

1. நிதிக் கூற்றுக்கள்

---

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 27 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 27 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு யடிநுவர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சில் இருந்து 2014 திசெம்பர் மாதத்தில் கிடைத்திருந்த 520 கல்வணய்ஸ் (GI) குழாய்களின் பெறுமதியாகிய ரூபா 575,716 இணைக் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஆயுள்வேத திணைக்களத்தில் இருந்து கிடைத்திருந்த மருந்து வகை தொக்கு ஒன்றின் பெறுமதி ரூபா 50,000 இனை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மின்சாரம், நீர், பொது ஆகிய அடிப்படையில் களஞ்சியப் பண்டங்கள் கொள்வனவு செய்யும் போது முற்பணக் கணக்கு முறைமையை கடைபிடிக்கப்படாமல் மொத்தச் செலவுகளும் வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,690,640 பெறுமதியான களஞ்சிய பண்டங்கள் நடைமுறை சொத்துக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(உ) முன்னைய ஆண்டு தொடர்பாக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 2,671,034 பெறுமதியான முத்திரைக் கட்டணம் மீளாய்வாண்டின் வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபைக்குச் சொந்தமான 25 காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 6,764,710 மற்றும் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாத 33 காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) முன்னைய ஆண்டின் போது புதிய கட்டிடத்திற்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 4,262,844 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் ரூபா 1,450,875 மாத்திரம் கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருந்தமையால் ரூபா 2,811,969 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) உரிமை உரித்தாக்கியிருக்காத ரூபா 772,932 தொகை பெறுமதியான 03 மோட்டார் வாகனங்கள் மற்றும் பெறுமதியினை இனங்காணப்படாத 53-4744 இலக்க கப் வண்டி ஒன்று கணக்கீட்டு பதிவு மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

03 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம், மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 48,279,817 ஆக காணப்பட்டதுடன், பட்டோலைகளின் பிரகாரம் அக் கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 50,897,681 ஆக காணப்பட்டமையால், ரூபா 2,617,864 இற்கான இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக கூற்றுக்களின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 118,225,067 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 8,253,434 ஆகும்.

1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களின் மூலம் சமர்ப்பித்திருந்த செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 100,439,110 ஆகக் காணப்பட்டதுடன், அவற்றின் 01 வருட காலத்தை மிகைத்திருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,940,310 ஆகும்.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை

06 கணக்கு விடயங்கள் தொடர்பாக தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுப் பெறுமதி ரூபா 30,429,795 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திரகமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவையின் 177 மற்றும் 178 பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு முரணாக கேள்வி கோரப்படாமல் ரூபா 24,552,057 பெறுமதியான 86 ஒப்பந்த வேலைகள் சனசமூக அடிப்படை அமைப்புக்கு வழங்கப்பட்டிருந்தது.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 34,721,435 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 36,619,226 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 1,897,791 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரின் மீளாய்வாண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | 2014.01.01 திகதிக்கு நிலுவை | ஆண்டின் போது சிட்டை இடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | | 2014.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை மீதியில் அறவிடப் படாத தொகை | 2014 சிட்டை இடப்பட்ட வருமானத் தில் அறவிடப் படாத தொகை | அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 2014.01.01 திகதி உள்ளவாறு நிலுவையாக சேகரித்த வருமானம் | 2014 ஆண்டின் போது சிட்டை யிடப்பட்ட வருமான த்தில் சேகரித்த வருமானம் | | | |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீத வரி மற்றும் வரி | 5,224,410 | 3,728,383 | 1,785,184 | 3,120,109 | 3,439,226 | 608,274 | 4,047,500 |
| நீர்க் கட்டணம் | 212,457 | 1,051,885 | 162,563 | 831,832 | 49,894 | 220,053 | 269,947 |
| ஏக்கர் வரி | 45,780 | 9,560 | 700 | 3,980 | 45,080 | 5,580 | 50,660 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 11,145 | 1,611,916 | - | 1,611,916 | 11,145 | - | 11,145 |
| கடை வாடகை | 43,450 | 617,850 | 43,450 | 582,850 | - | 35,000 | 35,000 |
| நீதிமன்றத் தண்டப் பணம் | 728,873 | 760,755 | 808,073 | 574,085 | (79,200) | 186,670 | 107,470 |
| முத்திரைக் கட்டணம் | 4,535,746 | 38,880,310 | 9,444,680 | 6,096,040 | (4,908,934) | 32,784,270 | 27,875,336 |

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 32,397,058 இற்கான மொத்த வருமானம் ஒன்று நிலுவையாகக் காணப்பட்டது.

2.2.2 வீத வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 5 வருடங்களுக்கு ஒரு முறை வீத வரி பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு, கட்டணம் தீர்மானிக்கப்பட வேண்டும். எனினும், 2006 ஆண்டின் பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டிற்கான வீத வரி அறவீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 4,047,510 ஆக காணப்பட்டதுடன், அப் பெறுமதியில் 1 முதல் 10 வரை இடைப்பட்ட வருட காலத்திற்கான நிலுவை வீத வரி ரூபா 3,439,225 தொகை காணப்பட்டது. வீதவரி செலுத்தாத வாடகையாளர்கள் தொடர்பாக 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) அரச விவசாய திணைக்களத்திற்கு மற்றும் புகையிரத திணைக்கத்திற்கு சொந்தமான 90 ஆதனங்களில் இருந்து 02 முதல் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் பழமை வாய்ந்த அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 618,200 இற்கான வீத வரியினை அறவீடு செய்வதற்காக முறையான நடைமுறை ஒன்று கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 செலுத்துகை டவர்கள் கட்டணம்

---

(i) சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் 03 செலுத்துகை டவர்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 2009 ஏப்ரல் 17 திகதி மற்றும் 1597/8 இலக்கம் கொண்ட நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், உயரம் அனைத்து 5 மீற்றர்களுக்கு ரூபா 10,000 வீதம் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 12 செலுத்துகை டவர்களின் மூலம் தொடர்பாடல் வசதிகள் வழுங்கப்பட்டிருந்த கம்பனிகளில் இருந்து வருடாந்த வர்த்தக வரி அறவிடப்பட வேண்டும். எனினும், 03 கம்பனிகள் தவிர ஏனைய கம்பனிகளின் மூலம் வர்த்தக வரி அறவீடு செய்திருக்கவில்லை. அத்துடன், அவை நிர்மாணிப்பதற்காக இணக்கச் சான்றிதளேனும் பெற்றிருக்கவில்லை.

2.2.4 நீர்க் கட்டணம்

---

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 269,947 ஆக காணப்பட்டதுடன், இவற்றில் ரூபா 38,038 இற்கான கட்டண நிலுவை 14 நுகர்வோர்களுக்குரிய ஒரு வருடத்தினை மிகைத்த நீர்க் கட்டணமாகும். இந்த மீதியில் 2015 ஜூன் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 18,267 தொகையொன்று மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

2.2.5 விளம்பரப் பலகைக் கட்டணம்

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியசரின் 2014 திசெம்பர் 12 திகதிய இலக்கம் 1893 கொண்ட யடிநுவர பிரதேச சபையின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிறுவப்பட்டிருந்த அறிவித்தல் பலகைகள் 29 இல் இருந்து ரூபா 915,000 கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை செய்திருக்கவில்லை.

2.2.6 நீதி மன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

---

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 107,470 வும் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 27,875,336 வும் கிடைக்க வேண்டியிருந்தது. அவ்வாறாயினும், நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 79,200 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 4,908,934 உம் முன்னைய ஆண்டுகளின் போது சிட்டை இடப்பட்ட தொகையை விட மிகையாகக் கிடைத்திருந்த காரணத்தினால் சிட்டையிடப்பட்ட வருமானத்தில் அறவிடப்பட வேண்டிய மீதிகளை கழித்துக் காட்டப்பட்டுள்ளது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் கணக்குகளின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காட்டப்பட்டிருந்த நிலுவை மீதி பிழைகளுடனானவையாகக் காணப்பட்டது.

2.2.7 சுற்றாடல் அனுமதிப் பத்திரக் கட்டணம்

---

2000 இன் 53 மற்றும் 1988 இன் 56 கொண்ட சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டம் மற்றும் அதன் கீழ் நடைமுறைப்படுத்தும் ஒழுங்கு விதிகளுக்கு அமைய 2008 ஜனவரி 25 திகதிய இலக்கம் 1533/16 கொண்ட சுற்றாடல் சார் அமைச்சின் அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 20 கைத்தொழில் வியாபார நிலையங்கள் சுற்றாடல் அனமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளாமல் தொழில் முயற்சிகளை நடத்தியுள்ளர். இதன் காரணமாக, ரூபா 146,600 இற்கான அனுமதிப்பத்திர வருமானத்தினையும் அறவீடு செய்வதற்காக முடியாதிருந்தது.

2.2.8 ஏனைய வருமானங்கள்

---

கட்டிட வரைபுகளை அங்கீகரிக்கப்பட்டிருந்த 17 வீடுகள் மற்றும் வியாபார நிலையங்களில் இணக்கஞ் சான்றிதழ் பெற்றுக் கொள்ளாமல் குடியிருப்பதன் காரணமாக 2009 ஏப்ரல் 17 திகதிய இலக்கம் 1597/8 கொண்ட நகர அபிவிருத்தி அதிகார சபையின் வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகளின் பிரகாரம் அக் குடியிருப்பாளர்களின் மீளாய்வாண்டு திசெம்பர் 31

திகதி அளவில் ரூபா 970,500 இற்கான தொகையொன்று தண்டப் பணமாக அறவீடு செய்யப்படவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

---------------------------------------------------------

5 வருட காலம் முதல் 02 கணக்கு விடயங்கள் தொடர்பாக அறவிடப்படாமல் காணப்பட்ட ரூபா 3,455,392 இற்கான தொகையொன்றினை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

-------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 329,137 இற்கான வங்கி மீதியைக் கொண்ட சபையின் செயற்படாத 02 நடைமுறைக் கணக்குகள் இலங்கை வங்கியில் பேணப்பட்டிருந்தது.

(ஆ) சபையின் நடைமுறைக் கணக்கில் ஆண்டு முழுவதும் ஒவ்வொரு மாதமும் 30 மில்லியன் ரூபாவை விட மிகையான மீதியொன்று காணப்பட்டது என அவதானிக்கப்பட்டதுடன் உச்ச மட்ட நலன் ஒன்றினை பெறக் கூடிய துறை ஒன்றில் முதலீடு செய்யப்படாமல் இவ்வாறு பாரிய தொகை ஒன்று நடைமுறை கணக்கொன்றில் தடுத்து வைக்கப்பட்டதற்கான காரணம் வெளிப்படுத்தப்படவில்லை.

(இ) சபையின் சேவையில் இருந்து ஓய்வு பெற்றிருந்த மற்றும் விட்டுச் சென்றுள்ள மூன்று அலுவலர்களிடம் பல வருட காலமாக முன் கொண்டு வரப்படும் ரூபா 289,841 இற்கான கடன் தொகையொன்றினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள மற்றும் ஓய்வுபெற்றுள்ள 07 அலுவலர்களிடம் ரூபா 23,398 இற்கான ஊழியர் பிணை வைப்பு தகைமை பரிசோதனை மேற்கொண்டு, திருப்பி செலுத்துவதற்காக அல்லது பொருத்தமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அங்கீகாரம் அற்ற 42 நிர்மாண வேலைகள் தொடர்பாக நடவடிக்கை ஏதும் கடைபிடித்திருக்கவில்லை. அத்துடன் தெரிவுப் பரிசோதனையின் போது 05 சந்தர்ப்பங்களில் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக ரூபா 100,930 இற்கான தண்டப் பணம் ஒன்றினை அறவீடு செய்திருக்கவில்லை.

3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 36,375 பெறுமதியான களஞ்சிய உபகரணங்கள் 85 அலகுகள் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன் அது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெறுமதியினை இனங்கண்டிருக்காத அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் 230 அலகுகள் நீண்ட காலம் முதல் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. அத்துடன் ஏல விற்பனை மூலம் விற்பனை செய்தவற்கு அல்லது பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------------------------

4.1 அகக் கணக்காய்வு

-------------------------------

மீளாய்வாண்டின் போது சபையினால் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் உள்ளூராட்சி திணைக்களத்தில் பரிசோதனை அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் பிரகாரம் குறிப்பிட்ட அறிக்கைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் தேவையான அகக் கட்டுப்பாட்டு முறை ஒன்று அறிமுகப்படுத்தி செயற்படுத்தியிருக்கவில்லை.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம், மதிப்பீட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 06 வருமான விடயங்களில் நூற்றிற்கு 25 முதல் நூற்றிற்கு 100 இனை மிகைத்தும், 04 செலவு விடயங்களில் நூற்றிற்கு 74 முதல் நூற்றிற்கு 100 இனை மிகைத்தும், முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்